## தொகுதி - 1

# திருவத்திபுரம் நகராட்சியின் தோற்றமும், ஊர் பெயர் மாற்றங்களின் வரலாறும்

## நகராட்சியின் தோற்றம்

நகர பஞ்சாயத்தாக இருந்த திருவத்திபுரம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 30.03.1978ம் தேதிய அரசாணை எண் 506ன் படி 01.04.1978 முதல் 3ம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. அப்படி உயர்வு செய்யப்பட்ட திருவத்திபுரம் நகராட்சி முன்று வருவாய் பிரிவு வட்டங்களாக பிரிக்கப்பட்டது. இதில் கொடநகர், பரிதிபுரம் மற்றும் திருவோத்தூர் என்ற பகுதிகள் அடங்கி இருந்தன. இவற்றின் மக்கள் தொகை அடிப்படையில் திருவத்திபுரம் நகராட்சி 20 வார்டுகளாக பிரிக்கப்பட்டது[1].

முன்றாம் நிலை நகராட்சியாக இருந்த திருவத்திபுரம் நகராட்சி 50 இலட்சம் வரை வருமானம் வரத்தக்க நிலையினைக் கொண்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறையின் 22.05.1998ம் தேதியில் அரசாணை (நிலை) எண். 85ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு திருத்தி ஆணை வெளியிடப்பட்டது. இதன்படி 20 நகர மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த திருவத்திபுரம் நகராட்சி 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது[2].

---

அரசாணை எண் 506 நாள் 01.04.1978

அரசாணை எண் 35 நாள் 22.05.1993

## நகரத்தின் அமைப்பு

திருவத்திபுரம் நகரம் 10.76 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாகும். இதன் கிழக்குப் பகுதியில் 30 கிலோமீட்டர் தொலைவில் காஞ்சிபுரம் நகராட்சியும், மேற்கே 33 கிலோமீட்டர் தொலைவில் ஆரணி நகராட்சியும், வடக்கே 18 கிலோமீட்டர் தொலைவில் வந்தவாசி நகராட்சியும், தெற்கே 40 கிலோமீட்டர் தொலைவில் ஆற்காடு நகராட்சியும் எல்லைகளாக உள்ளன. திருவத்திபுரம் நகரம் கிழக்கே சென்னையை 96 கிலோமீட்டரிலும், மேற்கே திருவண்ணாமலையை 96 கிலோமீட்டரில் இணைக்கும் பாலமாகவும் உள்ளது. திருவத்திபுரம் நகரத்தில் இருந்து சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் காஞ்சிபுரத்தில் ரெயில் நிலையம் உள்ளது[3].

இந்நகராட்சியின் பிரதான சாலைகளாக ஆற்காடு - திண்டிவனம் சாலையும், ஆரணி காஞ்சிபுரம் சாலையும் அமைந்துள்ளது.

திருவத்திபுரம் நகராட்சி திருவண்ணாமலை மாவட்டத்தில் அனைத்து வருவாய் கோட்டங்களையும், தாலுக்காவையும், தலைமை இடமாகவும், அறிஞர் அண்ணாவின் பெயரை தாங்கிய கலைக் கல்லூரியினையும் கொண்டு விளங்குகிறது.

---

[3] நகராட்சி அலுவலக தகவல் பலகை

## பருவ நிலை

இந்நகரத்தின் பெரும்பான்மையான பகுதி வறட்சிப்பகுதியாகவும், அதிக வெப்பநிலைக் கொண்டும் இருக்கிறது. ஆனால் மழைக் காலங்களான மே மற்றும் ஜூன் மாதங்களில் பெருமளவு மழை பெய்யும் சூழ்நிலையும், வடகிழக்கு பருவ காலத்தின் போது குறைந்த அளவு மழையும் பெய்யும் தன்மை கொண்டுள்ளது.

## நில வளம்

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பெரும்பான்மையான நிலப்பரப்பு பகுதிகள் செம்மண் வகையைச் சார்ந்தது. மற்ற பகுதிகள் களிமண் மற்றும் பாறைகளைக் கொண்ட அமைப்பாக உள்ளது.

## நீர் வளம்

திருவத்திபுரம் நகராட்சி நீர்வளம் மிக்க, ஆண்டு தோறும் தண்ணீர் பிரச்சனையே இல்லாத நல்ல வளமான, சுவையான நீர் ஆதாரமான சேயாற்றை ஒட்டி அமைந்துள்ளது.

## மக்கள் தொகை

2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 35,201. இதில் ஆண்கள் 17,497 பேரும், பெண்கள் 17,704 பேரும் உள்ளனர்[4].

## தொழில்

திருவத்திபுரம் நகர மக்களின் முக்கியத் தொழில் கைத்தறி மற்றும் பால் உற்பத்தி ஆகும். திருவத்திபுரம் நகரத்தின் அருகில் காஞ்சிபுரம் மற்றும் ஆரணி ஆகிய நகரங்களின் முலம் விற்பனை செய்யப்படும் பட்டு புடவைகள் இந்நகரத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

---

[4] தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு சான்றிதழ்

## நிலம்

நகரத்தின் பரப்பளவான 10.76 சதுர கிலோமீட்டரில் 81 சதவீதப் பகுதிகள் வளர்ச்சி அடையாத மற்றும் விவசாய நிலங்களையும், பயன்படுத்த இயலாத தரிசு நிலங்களையும் கொண்டுள்ளன. மேலும் இந்நகரத்தின் வளர்ச்சி அடைந்த வடக்குப் பகுதிகளாக புதுப்பாக்கம் மற்றும் பைங்கினர் விரிவு பகுதிகள் நன்கு வளர்ச்சி அடைந்த குடியிருப்பு பகுதிகளாக உள்ளது. மேற்கு பகுதியில் ஆரணி சாலையில் குடியிருப்புப் பகுதிகளும், விவசாயம் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளையும் கொண்டுள்ளது[5].

## போக்குவரத்து

இந்நகராட்சியின் பிரதான சாலையான காந்திசாலையில் பெரும்பகுதி வணிக நிறுவனங்கள் வளர்ச்சி கொண்டுள்ளது. இந்த காந்தி சாலையின் மையப் பகுதியில் இருந்து ஆரணி சாலை, காஞ்சிபுரம் சாலை, வந்தவாசி சாலை மற்றும் வேலூர், ஆற்காடு சாலைகள் நல்ல போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

இந்த நகரத்தினைச் சுற்றியுள்ள பகுதிகள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் கிராமப் பகுதிகளைக் கொண்டுள்ளதால் கிராம இணைப்புப் போக்குவரத்துகள் அதிகமாக உள்ளது.

## தொழிற்சாலைகள்

இந்நகராட்சிப் பகுதியில் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. ஆனால் நகரப்பகுதியில் இருந்து சுமார் 9 கிலோ மீட்டர் தொலைவில் ஆசியாவிலேயே மிகப் பெரியதும், கரும்பு சக்கையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் அம்சமும் கொண்ட செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது[6].

---

5 நகராட்சியின் நகர வரைபட அமைப்பு
6 மேலாண் அலுவலர், செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை அவர்களின் நேர்காணல்

# ஊர் பெயர் மாற்றத்தின் வரலாறு

## சேயாறு என பெயர் வரக் காரணம்

கயிலாயத்தில் ஒருநாள் விளையாட்டாக சிவபெருமானின் இரு கண்களையும் பார்வதி தேவியார் தன் இருகைகளால் மூடினார். அப்போது சகல உலகமும் இருண்டன. தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள், மிருகங்கள் முதலான சகல ஜீவராசிகளும் சோர்ந்து போயின.

இதையடுத்து, பார்வதி தேவி தனது தவறை உணர்ந்து இந்த பாவம் நீங்க என்ன செய்ய வேண்டும்? என சிவபிராணை வேண்டினார். அதற்கு "பூலோகத்தில் காஞ்சியில் உள்ள கம்பை நதிக்கரையில் என்னை நோக்கி தவமியற்றினால் உனது பாவம் போக்கப் பெருவாய்" என்று சிவபெருமான் கூறினார்[7].

## பாவம் நீங்கியது

அதன்படி பார்வதி தேவியும் பூலோகத்தில் காமாட்சி என்ற அவதாரம் கொண்டு காஞ்சிபுரத்தில் கம்பை நதிக்கரையில் இறைவனை நோக்கி தவமியற்றினார். மணலில் சிவலிங்கம் பிடித்து பூஜித்து தவமியற்றும் வேளையில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்ததை அறிந்த அம்மன், தன் திருக்கரங்களை கொண்டு சிவலிங்கத்தை தன்மார்போடு கட்டியணைத்து திரும்பி நின்றார். இந்நிகழ்ச்சியால் சிவலிங்கம் காப்பாற்றப்பட்டது.

---

7 [illegible] கவிராயர் - தே. திருவோத்தூர் தலபுராணம் - 1990 -
[illegible], 36/1 ஆற்காடு சாலை, செய்யாறு

இறைவன் உடனே மகிழ்ந்து ரிஷப வாகனத்தில் காட்சியளித்து "என் கண்களை மூடியப் பாவம் நீங்கப் பெற்றாய்" என்று கூற, உடனே பார்வதி தேவியார், உண்மை எப்போதும் பிரியாமலிருக்க உமது இடப்பாகம் அளிக்க வேண்டும் என வேண்டினார்.

காஞ்சி நகரத்தில் இருந்து தென் மேற்கு திசையில் உள்ள அருணை என்ற திருஅண்ணாமலைக்கு சென்று என்னை நோக்கி தவமிரு, அங்கே உமக்கு இடப்பாகம் அளிப்போம் என கூறி மறைந்தார்.

## வாழைப்பந்தல்

காமாட்சி அம்மையார் திருஅண்ணாமலையை நோக்கி புறப்பட்டார். பயணம் செல்லும் வழியில் அம்மன் இளைப்பாற, மைந்தனாகிய முருகன் வாழை இலைகளை கொண்டு பந்தலமைத்தார். மேலும், அம்மன் நீராடுவதற்கும், பூஜைகள் செய்வதற்கும் ஏதுவாக ஒரு ஆற்றை உருவாக்கினார்.

திருவண்ணாமலையில் இருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் இன்றும் "வாழைப்பந்தல்" என்ற பெயர் கொண்ட ஊர் உள்ளது. அங்கே சேயாறு எனப்படும் செய்யாறு ஓடிக் கொண்டிருக்கிறது. தாய்க்காக சேய் அழைத்த ஆறு என்பதால், "சேயாறு" என்றழைக்கப்படுகிறது[8]

இந்த புராணத்தை விளக்கும் வகையில், அங்கே ஒரு காமாட்சியம்மன் கோவிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

[8] தினமலர் நாளிதழ் நாள் 18.6.2004